மேற்கொண்டு, எந்த,எந்த இடங்களில் செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டு எழுதி கொடுப்பாரே யானால் மாநகராட்சியைவிட்டு அதை செய்யச் சொல்கிறேன். மேலும் மாநகராட்சிகளுக்கெல்லாம் ஆலோசனைக் குழு ஒன்று அமைப்பதற்காக அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. விரைவிலே அது அமைக்கப்பட்டவுடன், உறுப்பினர்கள் நேரடியாக மாநகராட்சியோடு தொடர்பு கொண்டு செய்யலாம்.

காங்கேயம், பெருந்துறை வட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை

632 *(வினா எண் 4822) திரு கா. செ. பழனிச்சாமி, மற்றும் டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், பெருந்துறை வட்டங்களில் குடிநீர்ப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) காங்கேயம் மற்றும் பெருந்துறை வட்டங்களின் நகரப் பகுதிகளில் தற்போது குடிநீர்த் தட்டுப்பாடு ஏதும் இல்லை. பெருந்துறை வட்ட ஊரகப் பகுதிகளில் கடந்த ஆண்டு பருவ மழைக்கு முன்னர் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தது. வரும் கோடைக் காலத்தில் அந்த நிலையைத் தவிர்க்க, தமிழ்நாடு குடிநீர் வாரியம் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

(முற்பகல் 9-10)

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம், பெருந்துறை போன்ற வட்டங்கள் அமைந்திருக்கின்ற பெரியார் மாவட்டத்திலும், அதன் இதர பகுதிகளிலும், சக்தி வட்டத்திலும் இதுபோன்ற கடுமையான குடிநீர்ப்பஞ்சம் இருக்கிறது. இதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் வழங்குகிற கருத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது நகரப் பகுதியில் தற்போது குடிநீர்த்தட்டுப் பாடு ஏதும் இல்லை என்றும் கிராமப்புறப் பகுதியில் கொஞ்சம் தட்டுப்பாடு இருந்தது என்றும் கோடைக்காலம் வந்தால் சரியாகக் கப்பட்டுவிடும் என்றும் கருத்து சொன்னார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை உள்ள நேரத்தில் வறட்சிப் பகுதியாக இருக்கிற பெரியார் மாவட்டத்தில் உள்ள அனைத்துப்பகுதிகளிலும் கூட்டுக் குடிநீர்த்திட்டத்தை ஒன்றன்பின் ஒன்றாகக் கொண்டு வருவதற்கு அரசு செயல்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆராயும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதியிலே கை இறைப்பான், போர்வெல், இவை எல்லாம் இப்போது பொய்த்துப் போய் அவற்றில் தண்ணீர் வருவது இல்லையென்று சொன்னதில் அவற்றை எல்லாம் ரெவியு செய்து புதிதாக அவை போன்ற கை இறைப்பான்கள் அமைக்கப்படும் என்று சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிகாரி பெருமக்கள் அவற்றை எல்லாம் ரெவியூ செய்து கணக்கெடுத்து இங்கே அரசுக்கு வருகிறது. இந்த ஆண்டும் பஞ்சம் வந்து விடுமோ என்ற பயம் இருப்பதால் பொய்த்துப் போன கை இறைப்பான்களுக்குப் பதிலாக புதிதாக உடனடியாகப் பெற்று அவசர நடவடிக்கையின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காங்கேயம், பெருந்துறை போன்ற பகுதிகள் மிகவும் வறட்சியாக இருப்பதால் அங்குள்ள மக்கள் இதை வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை மனுவை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற தண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கும்—அதேபோல் மாநிலம் பூராவும் குடிநீர் பஞ்சம் இருக்கிறது. இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து இதற்கு என்ன ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்து இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத் தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்தரங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரிதும் மனம் உவந்து 4 கோடியே 74 லட்சம் ரூபாய் திருவண்ணாமலைக்கு ஒதுக்கினார்கள். ஆனால் இன்று வரை அதற்காக மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாற்றுக் கட்சியினர் ஏதோ 4 கோடியே 74 லட்சம் ரூபாய் கிடைத்ததாக நான் பொய்ப் பிரச்சாரம் செய்து வருவதாகக் கூறுகிறார்கள். எனவே அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையைப்பற்றி விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் இது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, அது எந்தக்கட்டத்தில் இருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்ந்து பதில் சொல்ல முடியும்.

ஆண்டிப்பட்டி—குன்னூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

633—(*வினா எண் 4829)—திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி—குன்னூர் கூட்டுக் குடிநீர்த்திட்டத்தின் கீழ் ரெங்கசமுத்திரம், நாச்சியார்புரம், முத்தனம்பட்டி, அரப்படித்தேவன்பட்டி, சண்முகசுந்தரபுரம் போன்ற பதினொன்று கிராமங்களுக்குக் குடிநீர்வசதி செய்து தரும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்து தரப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஆண்டிப்பட்டி பேரூராட்சி குடிநீர் திட்டத்திலிருந்து, வினாவில் குறிப்பிட்டுள்ள 5 கிராமங்கள் உள்ளிட்ட 12 வழியோரக் கிராமங்களுக்குத் தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஞ்சியுள்ள 6 கிராமங்களுக்கு எப்போது குடிநீர் வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதிலேயே 12 வழியோர கிராமங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திலே மக்கள் தொகை ஆயிரத்திற்குக் கூடுதலாக இருக்கின்ற கிராமங்களில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் வீதமும், மக்கள் தொகை ஆயிரத்திற்குக் குறைவாக இருக்கிற